உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

॥ अष्टमीप्रबन्धे शिवदण्डकपादः ॥

॥ அஷ்டமீப்ரப³ந்தே⁴ ஶிவத³ண்ட³கபாத³꞉ ॥

நாராயண பட்டத்திரியின்
அஷ்டமீ பிரபந்தத்தினின்றும்

॥ ஶிவத³ண்ட³கம் ॥

தமிழ் உரை:
டாக்டர். **ந. கங்காதரன்** எம்.ஏ. எம்.லிட். பிஹெச்.டி
ஸம்ஸ்க்ருத விரிவுரையாளர், சென்னை பல்கலைக்கழகம்

जय जयजगदेकनाथ! प्रभो! देवदेव! प्रसीद त्रिशूलिन्! कपालिन्! भवाम्भोधिमध्ये सदाबद्धखेदं मुहुर्मज्जनो न्मज्जनैर्मुह्यते महामाशु प्रदेहि प्रमोदेन ते पादपङ्केरुहं नावमाविर्दयम् | त्वत्पदाम्भोरुहादन्यदस्मादृशां किं समालम्बनं सान्द्र कारुण्यसिन्धो! सतामेकबन्धो ! जगत्सृष्टिरक्षा विनाशैकदीक्षाधुरीणा मरीणामार्द्रका रुण्यधारा सुधाधोरणीसारणीं भक्तिभाजां जनानामहन्तालताकर्तरी मृत्युजन्मा दिसन्ता पविध्वंससिद्धौषधि देहि तुष्टामितो दृष्टिमिष्टप्रदां नौमि नित्यम् ।

ஜய ஜயஜக³தே³கநாத²! ப்ரபோ⁴! தே³வதே³வ! ப்ரஸீத³ த்ரிஶூலின்! கபாலின்! ப⁴வாம்போ⁴தி⁴மத்⁴யே ஸதா³ப³த்³த⁴கே²த³ம் முஹுர்மஜ்ஜஞ்நேந்மஜ்ஜ ஜனர்முஹ்யதே மஹாமாஶு ப்ரதே³ஹி ப்ரமோதே³ன தே பாத³பங்கேரு ஹம் நாவமாவிர்த³யம்! த்வத்பதா³ம்போ⁴ருஹாத³ன்யத³ஸ்மாத்³ருஶாம் கிம் ஸமால ம்ப³னம் ஸாந்த்³ர காருண்யஸிந்தோ⁴! ஸதாமேகப³ந்தோ⁴! ஜக³த்-ஸ்ருஷ்டி-ரக்ஷா விநாஶைக-தீ³க்ஷா-து⁴ரீணாமரீணாமார்த்³ர-காருண்ய-தா⁴ராஸுதா⁴-தோ⁴ரணீ - ஸா ரணீம் ப⁴க்திபா⁴ஜாம் ஜனாநாமஹந்தா-லதாகர்தரீ ம்ருத்யு ஜன்மாதி³ - ஸந்தாப - வித்⁴வம்ஸ - ஸித்³தௌ⁴ஷதி⁴ தே³ஹி துஷ்டாமிதோ த்³ருஷ்டிமிஷ்டப்ரதா³ம் நௌமி நித்யம் ।

உலகமனைத்திலும் சிறந்த தெய்வமே! நீர் வெல்வீராக! பெருந்தலைவரே! வானவர்க்கும் தலைவரே! அருள்புரியுங்கள். திரிசூலம் தாங்கியவரே! மண்டை ஓட்டைத் தாங்கியவரே! பிறப்பு, இறப்பு என்னும் ஆழ்கடலின் நடுவில் எப்பொழுதும் கட்டுண்டு வருந்தி மீண்டும் மீண்டும் மூழ்கி எழுவதால் மயக்கமுற்ற எனக்கு மிக்க மகிழ்ச்சியுடன் உம்முடைய பாதத் தாமரைகளை விரைவில் தாரும்! பாதத் தாமரைக ளான படகினில் ஏறிவிட்டேன். உம் பாதத் தாமரையைத் தவிர்த்து எங்கள் போன்றவர்க்கு பிடிப்பு ஏது? அளவற்ற கருணைக்கடலே, நல்லவர்களுக்குச் சிறந்த சிறந்த உற்றவரே! உலகினைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மேம்பட்ட கடமையில் சிறந்தவரின் வற்றுத நெகிழும் கருணை ஊற்றின் அமிர்தமயமான வெள்ளப் பெருக்கின் வாய்க்காலும், பக்தி பெருகும் மக்களின் அகந்தை என்னும் கொடியைக் களையும், மரணம், பிறப்பு முதலான துன்பங்களை அழிக்கும் அரு மருந்தைக் கொடுங்கள். மகிழ்வுற்றதும் விரும்பியதை வழங்குவதுமான பார்வை யை இப்பொழுதிலிருந்து எப்பொழுதும் வணங்குகின்றேன்.

क्वचिच्चञ्चदञ्चज्जटामण्डलीहिण्डमानस्फुरत्स्वस्तरिन्नि: – सरल्लोल कल्लोलहल्लोहलध्वाननिर्भूतलोकं, क्वचिचारुधम्मिल्लभारो- ल्लसन्मल्लिकाव ल्लरीनिर्यदामोदसं भारसं भ्राम्यदुत्तालमत्ता लिझंकार - शृङ्गारिताशान्तरालं, क्वचिन्मुण्डमालागणैर्मण्डितं, कुत्रचित् फुल्ल - मौल्युत्कैरुल्लसन्तं, क्वचित् भस्म पुण्ड्रोल्ल सत्फालदेशं, क्वचिन्नील- लोलाळकाळी समुल्ला सिवक्त्रारविन्दं, क्वचित् फालनेत्रोज्वल- द्वीतिहोत्रं, क्वचिचित्रकस्तूरिकाचित्रकालङ्कृतं, कुत्रचित् भक्त- त्रुष्णालताकन्ददात्रायितारक्तनेत्राञ्चलं, कुत्रचिद्वित्रसद्धालसारङ्ग- योषिच्च लापाङ्गभङ्गीभिरङ्गीकृत, कुत्रचित् भूरिभूतिस्फुरत्पाण्डु- गण्डस्थलं, कुत्रचिचित्रपत्राक्कुरैरङ्कितं, कुत्रचित्कर्णभूषापदोद्धा - सित स्थूलकद्रुसुतं, क्वापि गण्डस्खलत्कुण्डलालग्न प्रभाभासुरं, क्वापि च स्फीतवक्षस्थला कुण्ठभस्मा वकुण्ठोज्वलं, क्वापि चोत्तु- ङ्गपी नस्तनासक्तक तूरिका कर्दमं, कुत्रचिल्ल म्बमानास्थिमालागणं, क्वापि चामुक्तमुक्तावलीबन्धुरं, कुत्रचित् भस्मना भासमानोदरं, क्वापि चापीनवक्षोरुहक्लान्तभुग्नावलग्नं, क्वचिद्व्याघ्रचर्माम्बरा कम्र- शोभं, क्वचिच्चापि शुम्भन्नि म्बस्थलोद्यद्दुकूल । ञ्चलाबद्धकाञ्ची- कलाप, क्वचित् भोगिनन्दस्फुरत्पादपद्मम्, क्वचिन्मन्जु शिञ्जान- मन्जीरकालङ्कतं गोत्रराजात्मजागात्रमिश्रीभवन्तं भवन्तं सदा मानसे शीलयाम ।

க்வசிச்சஞ்சத³ஞ்சஜ்ஜடாமண்ட³லீ ஹிண்ட³மான ஸ்பு²ரத்ஸ்வஸ் ரின்னிஃஸரல்லோல - கல்லோல - ஹல்லோஹலத்⁴வாநநிர்பூ⁴தலோகம், க்வசி சாரு - த⁴ம்மில்ல - பா⁴ரோல்லஸன்மல்லிகாவல்லரீ - நிர்யதா³மோத³ஸம்பா⁴ர - ஸம்ப்⁴ராம்யது³த்தால - மத்தாலிஜ²ங்கார - ஶ்ருங்கா³ரிதாஶாந்தராலம்,

க்வசின்முண்ட³மாலாக³ணைர்மண்டி³தம், குத்ரசித் பு²ல்லமௌல்யுத்கரைருல்ல ஸந்தம், க்வசித் ப⁴ஸ்ம புண்ட்³ரோல்ல ஸத்பா²லதே³ஶம், க்வசிந்நீல-லோலாளகாளீ - ஸமுல்லாஸிவக்த்ராரவிந்த³ம், க்வசித் பா²லநேத்ரோ - ஜ்வல த்³வீதிஹோத்ரம், க்வசிசித்ர - கஸ்தூரிகா - சித்ரகாலங்க்ருதம், குத்ரசித் ப⁴க்த - த்ருஷ்ணா — லதா - கந்த³தா³த்ராயிதாரக்தநேத்ராஞ்சலம், குத்ரசித்³ வித்ரஸத்³ - பா⁴ல - ஸாரங்க³ - யோஷிச்சலாபாங்க³ - ப⁴ங்கீ³பி⁴ரங்கீ³க்ருத, குத்ரசித் பூ⁴ரிபூ⁴திஸ்பு²ரத்பாண்டு³ - க³ண்ட³ஸ்த²லம், குத்ரசிசித்ரபத்ராக்குரைரங்கிதம், குத்ரசித் கர்ணபூ⁴ஷாபதோ³த்³பா⁴ஸித - ஸ்தூ²லகத்³ருஸூதம், க்வாபி க³ண்ட³ ஸ்க²லத்குண்ட³லாலக்³ன - ப்ரபா⁴பா⁴ஸூரம், க்வாபி ச ஸ்பீ²த - வக்ஷஸ்த² லாகுண்ட² - ப⁴ஸ்மாவகுண்டோ²ஜ்வலம், க்வாபி சோத்துங்க³ - பீநஸ்தனு ஸக்தகதூரிகாகர்த³மம், குத்ரசில்லம்ப³மாஞஸ்தி² - மாலாக³ணம், க்வாபி சாமுக்தமுக்தாவலீ - ப³ந்து⁴ரம், குத்ரசித் ப⁴ஸ்மனு பா⁴ஸமானோத³ரம், க்வாபி சாபீன - வக்ஷோருஹக்லாந்த - பு⁴க்³ஞவலக்³னம், க்வசித்³வ்யாக்⁴ர - சர்மாம்ப³ ராகம்ர - ஶோப⁴ம், க்வசிச்சாபி ஶும்ப⁴ன்னிதம்ப³ஸ்த²லோத்³யத்³ - துகூலஞ்ச லாப³த்³த⁴ - காஞ்சீகலாபம், க்வசித்போ⁴கி³வ்ருந்த³ஸ்பு²ரத்பாத³பத்மம், க்வசின் மன்ஜுஶிஞ்ஜானமன்ஜீரகாலங்க்ருதம் கோ³த்ரராஜாத்மஜா - கா³த்ர - மிஸ்ரீப⁴வந் தம் ப⁴வந்தம் ஸதா³ மானஸே ஶீலயாம ।

ஓரிடத்தில் அசைகின்ற சுருண்ட சடையில் ஓடுகின்ற பொங்கும் தன் ஆற்றிலுள்ள அலைகளின் ஒலியினால் அசைக்கப்பட்ட உலகத்தை உடையவரும், ஓரிடத்தில் அழகிய கூந்தல் தாங்கும் ஒளிரும் மல்லிகைக் கொடியினின்று வரும் நறுமணப்பெருக்கினால் சுழலும் பெரும் குடிமயக்கம் கொண்ட வண்டுகளின் ரீங்காரத்தினால் கவர்ச்சியாக்கப்பட்ட திசைகளை உடையவரும், ஓரிடத்தில் முண்டமான உடல்களாலான மாலையையணிந்த பூதகணங்களால் சூழப்பட்டவரும், ஓரிடத்தில் தலைமீது மலர்ந்த அசோக மலர்களினால் விளங்குபவரும், ஓரிடத்தில் திருநீறு ஒளிரும் நெற்றிப் பகுதியை உடையவரும், ஓரிடத்தில் அசைந்தாடும் கருத்த கூந்தலில்வண்டுடன்ஒளிரும் முகத்தாமரையை உடையவரும் ஓரிடத்தில் நெற்றிக்கண்ணினின்றும் ஜ்வலிக்கும் நெருப்பை உடையவரும், ஓரிடத்தில் பிரகாசிக்கும் கஸ்தூரியினாலான நெற்றிப் பொட்டினால் அலங்கரிக்கப்பட்டவரும், ஓரிடத்தில் தம் பக்தர்களின் ஆசை என்னும் கொடிச்சுழலைக்களைவதினால் சிவந்த கடைக்கண் பகுதியை உடையவரும், ஓரிடத்தில் பயந்த இளம்புள்ளிமானின் மிரண்ட கடைக்கண் பார்வைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவரும், ஓரிடத்தில் நிரம்ப திருநீறு ஒளிரும் வெளுத்த கழுத்துப்பகுதியை உடையவரும், ஓரிடத்தில் பிரகாசிக்கும் இலைத்துளிர்களின் குறியை உடையவரும், ஓரிடத்தில் காதணியாக ஒளிரும் பருத்த அரவத்தை உடையவரும், ஓரிடத்தில் கன்னத்தில் தொங்கும் ண்டலங்களிலுள்ள இரத்தினங்களின் ஒளியினால் விளங்குபவரும், மேலும் ஓரிடத்தில் பரந்த மார்பில் பரவிப் பூசப்பட்ட திருநீறுடன் ஒளிர்பவரும், ஓரிடத்தில் உயர்ந்த பருத்த ஸ்தனபாகத்தில் பூசப்பட்ட கஸ்தூரிக் குழம்பை உடையவரும், ஓரிடத்தில் தொங்கும் அஸ்தி மாலையின் தொகுப்பை உடையவரும், ஓரிடத்தில் அணியப்பட்ட முத்துமாலையுடன் விளங்குபவரும், ஓரிடத்தில் திருநீறினால் ஒளிரும் வயிற்றுப் பகுதியை உடையவரும், ஓரிடத்தில் பருத்த மார்பினால் சோர்வுற்று

வளைந்த இடுப்பை உடையவரும் ஓரிடத்தில் புலித்தோலணிந்ததினால் அழகிய தோற்றத்தை உடையவரும். ஓரிடத்தில் உடலின் பின் பகுதியில் ஒளிரும் பட்டின் நுனியில் கட்டப்பட்டு சிறந்து விளங்கும் ஒட்டியாணத்தை உடையவரும், ஓரிடத்தில் அரவங்களின் கூட்டங்கள் துள்ளி விளங்கும் பாதத்தாமரைகளை உடையவரும், ஓரிடத்தில் கவர்ச்சியாக ஒலிக்கும் சதங்கையினால் அழகு செய்யப் பட்டவரும், மலையரசனின் மகளின் உடலுடன் ஒன்றியவருமான உம்மை (எம்) மனத்தில் எப்பொழுதும் வழிபடுகின்றோம்.

सदा त्वत्पदाम्भोरुहद्वन्द्वसं सेवन दन्यदेकं न वाञ्छा- म्यहं ; कृन्धि तृष्णालतां; छिन्धि संसारबन्धं; मनोवागलभ्य- स्वरूपाय तुभ्यं नमः; सच्चिदानन्दकन्दाय तुभ्यं नमः; सर्व- वेदान्तसिद्धान्ततत्वार्थसारस्वरूपाय तुभ्यं नमः; नित्यशुद्ध- प्रबुद्धाय तुभ्यं नमः ; रज्जुसर्पाभमेतत् समस्तं प्रपञ्चं सदा पश्यतां योगभाजां जनानामिडापिङ्गलानाडिसन्नद्धशुम्भत्सुषुम्ना- महानाडिमध्ये विशुद्धे समाधौ स्फुटं भासमानाय संवित्प्रकाशाय तुभ्यं नमः; पाहि पाहि प्रभो ! मन्मथारे ! महादेव ! शम्भो ! कृपाम्भोनिधे ! हे प्रभो ! विश्वमूर्ते ! नमस्ते नमस्ते नमस्तेऽस्तु शम्भो ! नमः ।

ஸதா³ த்வத்பதா³ம்போ⁴ருஹ - த்³வந்த்³வ - ஸம்ஸேவனத³ன்யதே³கம் ந வாஞ்சா²ம்யஹம்; க்ருந்தி⁴ த்ருஷ்ணாலதாம்; சி²ந்தி⁴ ஸம்ஸாரப³ந்த⁴ம்; மனோவாக³லப்⁴யஸ்வரூபாய துப்⁴யம் நம꞉; ஸச்சிதா³னந்த³கந்தா³ய துப்⁴யம் நம꞉; ஸர்வ - வேதா³ந்த ஸித்³தா⁴ந்த - தத்வார்த்த² - ஸார - ஸ்வரூபாய துப்⁴யம் நம꞉; நித்ய - ஶுத்³த⁴ - ப்ரபு³த்³தா⁴ய துப்⁴யம் நம꞉; ரஜ்ஜுஸர்பாப⁴மேதத் ஸமஸ்தம் ப்ரபஞ்சம் ஸதா³ பஶ்யதாம் யோக³பா⁴ஜாம் ஜனாநாமிடா³ பிங்க³லா - நாடி³ - ஸன்னத்³த⁴ - ஶும்ப⁴த்ஸுஷும்னா - மஹாநாடி³ - மத்⁴யே விஶுத்³தே⁴ ஸமாதௌ⁴ ஸ்பு²டம் பா⁴ஸமானாய ஸம்வித்ப்ரகாஶாய துப்⁴யம் நம꞉; பாஹி பாஹி ப்ரபோ⁴! மன்மதா²ரே! மஹாதே³வ! ஶம்போ⁴! க்ருபாம்போ⁴நிதே⁴! ஹே ப்ரபோ⁴! விஶ்வமூர்தே! நமஸ்தே நமஸ்தே நமஸ்தே (அ)ஸ்து ஶம்போ⁴! நம꞉ ।

எப்பொழுதும் உம்மிரு பாதத்தாமரைகளை வழிபடுவதைத் தவிர மற்றெதையும் நான் விரும்பவில்லை. ஆசைக் கொடியைக் கத்தரித்துவிடும். பிறப்பு, இறப்பு என்னும் பிணைப்பைக் களைந்துவிடும். மனத்தாலும் சொல்லாலும் அடைய முடியாத உருவமுடைய உமக்கு வணக்கங்கள். ஸத், சித், ஆனந்தவடிவமான உமக்கு வணக்கங்கள். அனைத்து வேதாந்த சித்தாந்த தத்துவப் பொருள்களின் ஸார வடிவான உமக்கு வணக்கங்கள். எப்பொழுதும் தூய ஞானியான உமக்கு வணக்கங் கள். கயிறு ஒரு அரவம் போலத் தோற்றமளிக்கும் இந்த பிரபஞ்சமனைத்தையும் எப்பொழுதும் நோக்கும் மக்களுடைய இடை, பிங்களை என்னும் இவ்விரு நாடிகளால் சூழப்பட்டு ஒளிரும் ஸுஷும்னை என்னும் சிறந்த நாடியின் நடுவே தூயமான ஸமாதிநிலையில் துல்யமாகப் பிரகாசிக்கும் ஞானவடிவாய்த் திகழும் உமக்கு என் வணக்கங்கள். என்னைக் காத்திடும்! காத்திடும்! பிரபுவே! காமனின் பகைவரே! தெய்வங்களுள் சிறந்தவரே! செல்வத்தைக் கொடுப்பவரே! கருணைக்

கடலே! ஓ! பிரபுவே! உலகவடிவானவரே! உமக்கு என்னுடைய வணக்கங்கள். ஓ! செல்வத்தைக் கொடுப்பவரே!

[**உரையாசிரியர் குறிப்பு:** திருமாலின்மீது நாராயணீயம் என்னும் சிறந்த தோத்திரத்தைப் பாடி புகழ் பெற்ற மேல்புத்தூர் நாராயணபட்டர் திருமாலிடம் ஈடுபாடு கொண்டவர் என்றும் அதனுல் அவர் தம் நூலில் மற்ற தெய்வங்களைக் குறைத்துக் கூறியிருக்கிறுர் என்றொரு கருத்து நிலவுகிறது. அதற்கு மாறுக அவர் சிவனுரையும் சிறப்பாகப் பாடியதொரு நூல் இருக்கிறது என்று யாவரும் அறிய அவருடைய இந்த நூலை இங்கு மொழி பெயர்த்து தந்துள்ளேன். கேரளத்தில் வைக்கம் என்றதொரு புகழ் பெற்ற சிவத்தலம் உள்ளது. அங்கு ஒரு சிறந்த சிவாலயம் உள்ளது. அங்கு ஆண்டுதோறும் இருமுறை கார்த்திகை, மாசி இவ்விரு மாதங்களிலும் அஷ்டமி திதியில் திருவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. இவ்விழாவினை விவரித்து நாராயணபட்டர் **'அஷ்டமீ சம்பூ'** அல்லது **'வ்யாக்ராலயேசாஷ்டமீ மஹோத்ஸவ சம்பூ'** என்னும் ஒரு சிறு நூலை இயற்றியுள்ளார். 40 செய்யுட்களும் 22 உரைநடைப் பகுதிகளும் உள்ள இந்நூலில் சிவனுரைப் போற்றும் தண்டகம் ஒன்றை அமைத்துள்ளார். இந்த தண்டகம் வடிவில் சிறிதே ஆயினும் அதன் சொல் நயமும் பொருள் நயமும் படிப்பவர் மனத்தைக் கவரவல்லது என்பதில் சிறிதும் ஐயமில்லை. தாம்பாடும் பொருளை அனைத்திலும் உயர்ந்ததாகக் கூறுவது கவிகளின் இயல்பு. அவ்வாறே இங்கும் சிவனுரை சிறப்பாகக் கொண்டாடும் சில சொற்றெடர்கள் அமைந்துள்ளன. உதாரணமாக, 'ஜகதேகநாத', 'த்வத்பதாம்போருஹாதன்ய - தஸ்மாத்ருசாம் கிம் ஸமாலம்பனம்', 'ஏகபந்தோ', முதலியவற்றைக் கூறலாம். இந்த தண்டகத்தைப் படித்து இன்புற்று பரமனின் அருளுக்குப் பாத்திரமாவோம்]. சிவம்